TAMIL NADU ELECTRICITY REGULATORY COMMISSION
**No. 19A, Rukmini Lakshmipathy Road, (TIDCO Complex),**
**Egmore, Chennai 600 008**
Phone: ++91-44-28411376 / 28411378 / 28411379 Fax: ++91-44-2841137
**email: tnerc@nic.in** **Website: www.tnerc.gov.in**

எண். 2 / 2010
நாள் 10–03–2010

# செய்தி வெளியீடு

பொருள் – தமிழ்நாடு மின்சார வாரியத்தின் மின் கட்டண மனு – தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் பொது மக்கள் கருத்துக் கேட்பு கூட்டம் நடத்துதல்.

*******

தமிழ்நாடு மின்சார வாரியம், பின்வரும் மின் நுகர்வோர் வகையினருக்கு தற்போதுள்ள மின்கட்டணத்தை மாற்றியமைப்பதற்காக தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் முன்பு 18–01–2010 அன்று மின்கட்டணத்தை மாற்றியமைப்பதற்கான மனுவை தாக்கல் செய்துள்ளது.

**உத்தேசிக்கப்பட்டுள்ள மாற்றியமைத்தல்**

| வரிசை எண் | நுகர்வோர் வகையினர் | தற்போதுள்ள மின்கட்டணம் | உத்தேசிக்கப்பட்டது |
|---|---|---|---|
| 1. | உயர் அழுத்தம் – தொழிற் சாலைகள் | யூனிட் ஒன்றுக்கு ரூ.3.50 | யூனிட் ஒன்றுக்கு ரூ.4.00 |
| 2. | உயர் அழுத்தம் – கல்வி நிறுவனங்கள் | யூனிட் ஒன்றுக்கு ரூ.3.50 | யூனிட் ஒன்றுக்கு ரூ.4.20 |
| 3. | உயர் அழுத்தம் – வணிக நிறுவனங்கள் | யூனிட் ஒன்றுக்கு ரூ.500 | யூனிட் ஒன்றுக்கு ரூ.5.80 |
| 4. | தாழ்வழுத்தம் – வீடுகளுக்கு (தாழ்வழுத்தம் I-A) (இரண்டு மாதங்களுக்கு 201 யூனிட்டுகளுக்கு மேல் 400 யூனிட்டுகள் வரை) | யூனிட் ஒன்றுக்கு ரூ.3.50 | யூனிட் ஒன்றுக்கு ரூ.4.00 |
| 5. | தாழ்வழுத்தம் – வீடுகளுக்கு (தாழ்வழுத்தம் I-A) ( இரண்டு மாதங்களுக்கு 401 யூனிட்களுக்கு மேல் 600 யூனிட்டுகள் வரை ) | யூனிட் ஒன்றுக்கு ரூ.3.50 | யூனிட் ஒன்றுக்கு ரூ.4.25 |
| 6. | தாழ்வழுத்தம் – வீடுகளுக்கு (தாழ்வழுத்தம் I-A) (இரண்டு மாதங்களுக்கு 600 யூனிட்டுகளுக்கு மேல்) | யூனிட் ஒன்றுக்கு ரூ.4.75 | யூனிட் ஒன்றுக்கு ரூ.5.75 |
| 7. | தாழ்வழுத்தம் – மொத்த மின் வழங்கல் (தாழ்வழுத்தம் I-C) | யூனிட் ஒன்றுக்கு ரூ.3.50 | யூனிட் ஒன்றுக்கு ரூ.5.00 |
| 8. | தாழ்வழுத்தம் – II-B (சினிமா திரையரங்குகள் ) | யூனிட் ஒன்றுக்கு ரூ.4.40 | யூனிட் ஒன்றுக்கு ரூ.5.00 |

| | | | |
|---|---|---|---|
| 9. | தாழ்வழுத்தம் – II-B (தனியார் கல்லூரிகள் ) | யூனிட் ஒன்றுக்கு ரூ.4.40 | யூனிட் ஒன்றுக்கு ரூ.6.00 |
| 10. | தாழ்வழுத்தம் – III-A-1 (குடிசை மற்றும் குறுந்தொழில்கள் ) இரண்டு மாதங்களுக்கு 1500 யூனிட்டுகளுக்கு மேல் | யூனிட் ஒன்றுக்கு ரூ.3.10 | யூனிட் ஒன்றுக்கு ரூ.3.50 |
| 11. | தாழ்வழுத்தம் – III-B (தாழ்வழுத்த தொழிற்சாலைகள் ) இரண்டு மாதங்களுக்கு 1500 யூனிட்டுகளுக்கு மேல் | யூனிட் ஒன்றுக்கு ரூ.4.70 | யூனிட் ஒன்றுக்கு ரூ.5.00 |
| 12. | தாழ்வழுத்தம் – வணிகம் மற்றும் பிறருக்கு தாழ்வழுத்தம் – V ( இரண்டு மாதங்களுக்கு 200 யூனிட்டுகளுக்கு மேல் ) | யூனிட் ஒன்றுக்கு ரூ.5.80 | யூனிட் ஒன்றுக்கு ரூ.6.50 |
| 13. | தாழ்வழுத்தம் – VI தற்காலிக மின்வழங்கல் – அபரிமிதமான விளக்கு அலங்காரம் | யூனிட் ஒன்றுக்கு ரூ.7.00 | யூனிட் ஒன்றுக்கு ரூ.10.50 |

இந்த மனு ஆணையத்தினால், 9–2–2010 அன்று மின்கட்டண மனு (Tariff Petition) 1 / 2010 ஆக ஏற்றுக் கொள்ளப்பட்டது மற்றும் தமிழ்நாடு மின்சார வாரியம் பொதுமக்கள் கருத்துக்களையும், மற்றும் அதில் அவர்களுடைய மறுப்புரைகளையும் / குறிப்புரைகளையும் தெரிவிப்பதற்காக 25–03–2010 கடைசி நாளாகக் குறிக்கப்பட்டு இரண்டு ஆங்கிலம் மற்றும் தமிழ் நாளிதழ்களில் அந்த உத்தேசித் திட்டத்தின் சிறப்பியல்புகளை வெளியிடுமாறு உத்தரவிடப்பட்டது.

தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் மாநில ஆலோசனைக்குழுக் கூட்டம் இது குறித்து விவாதிப்பதற்காக 11–3–2010 அன்று கூட்டப்பட்டுள்ளது.

அடுத்த நிலை ஆலோசனை நடவடிக்கையாக, ஆணையம், பின்வரும் இடங்களில் அவற்றிற்கு எதிராகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ள நாட்களில் மின்கட்டண உத்தேசத்திட்டத்தின் பேரில் சம்பந்தப்பட்டவர்கள் அனைவரிடமிருந்தும் கருத்துக்களையும் மற்றும் மறுப்புரைகளையும் கேட்பதற்கு பொது மக்கள் கருத்து கேட்புக்கூட்டத்தை நடத்தவிருக்கிறது.

| வரிசை எண் | இடம் | நாள் |
|---|---|---|
| 1 | சென்னை | 30–3–2010(செவ்வாய்க்கிழமை) |
| 2 | மதுரை | 8–4–2010 (வியாழக்கிழமை) |
| 3 | கோயம்புத்தூர் | 13.4–2010 (செவ்வாய்க்கிழமை) |
| 4 | திருச்சி | 15–4–2010 (வியாழக்கிழமை) |

இது குறித்த நேரம் மற்றும் இடம் பற்றி செய்தித்தாள்களிலும், ஊடகங்களிலும் ஆணையத்தினால் அறிவிக்கை செய்யப்படும்.

**இரா. பாலசுப்பிரமணியன்**
செயலாளர்